மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
வலங்கைமான்.

**முன்னிலை :- திரு. P. ஜேசுபாலன், M. A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
வலங்கைமான்.

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ம் நாள் திங்கள்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 22/2025**

**குற்ற எண். 10/2025**

**CNR No. TNTV09-000329-2025**

**அரசுக்காக**
**காவல் உதவி ஆய்வாளர்,**
**வலங்கைமான் காவல் நிலையம்,**
**திருவாரூர் மாவட்டம்.** ... குற்றமுறையீட்டாளர்.

// எதிர்//

1. கோமதி (42/2026)
   த/பெ. ரெகுபதி,

2. ராஜா (19/2026)
   த/பெ. நாகமுத்து,

3. அனுசியா **(37/2026)**
   க/பெ., ராஜா

1 முதல் 3 எதிரிகளின் வசிப்பிடம்
கீழத்தெரு, அவிச்சாகுடி
வலங்கைமான் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம். ...எதிரிகள்.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:03:37 +0530

## 2019 ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிகள், விதி 106 ன் கீழ் படியான விபரங்கள்

| Sl. No. | Name of the Complaint | Name of the accused | Date of Arrest | Date of Release |
|---|---|---|---|---|
| (i) | State Rep. By<br>The Inspector of Police, Valangaiman., | A1. Gomathi<br>S/o Regupathi, | A.B. | A.B. |
| | | A2. Raja<br>S/o Nagamuthu | 07.01.2025 | 09.01.2025 |
| | | A3 Anusiya<br>W/o Raja | A.B. | A.B. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | Date of filling of the complainant/ final report in the court | **Filing of Complainant** | **Taken on file** |
| | | 07.01.2025 | 29.05.2025 |
| (iii) | Date of committal of the cases to the court of sessions | **:** | Nil |
| (iv) | Date of questioning of the accused U/s. 228, 240, 246 and 251 as the case may be | **:** | 07.10.2025 |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the code. | **Crl.M.P.No.** | **Date of filing** | **Result** |
| | **Nil** | **Nil** | **Nil** | **Nil** |
| (vi) | Date of Examination in Chief and Cross | **Name of the Examination** | **Date of Chief** | **Date of Cross** |
| | P.W.1 | Saraswathi | 03.11.2025 | 03.11.2025 |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:03:47 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | P.W.2 | Mukilan | 03.11.2025 | 03.11.2025 |
| | P.W.3 | Gopal | 03.11.2025 | 03.11.2025 |
| | P.W.4 | Amuthan | 06.11.2025 | 06.11.2025 |
| | P.W.5 | Ramesh | 06.11.2025 | 06.11.2025 |
| | P.W.6 | Murugaiyan | 06.11.2025 | 06.11.2025 |
| | P.W.7 | Muruganantham | 06.11.2025 | 06.11.2025 |
| | P.W.8 | Subramanian | 06.11.2025 | 06.11.2025 |
| (vii) | Date of examination of the accused U/s. 313 of the Code | | | 17.11.2025 |
| (viii) | Details of abscondence of an accused and his appearance/Production as the case may be: | | | Nil |

| | | | | |
|---|---|---|---|---|
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | Sessions Court CMP No. | High Court No. and Date of stay | Result |
| | Nil | Nil | Nil | Nil |

| | |
|---|---|
| முதலாவதாக | U/s. 296(b) BNS கடந்த 05.01.2025ம் தேதி இரவு 8.00 மணியளவில் சாட்சி 1 சரஸ்வதி மற்றும் மகன்களான சாட்சி 2 முகிலன் சாட்சி 3 அமுதன் ஆகியோர்கள் கோமதி வீட்டு முன்பு நடந்து சென்ற போது எதிரி1, சாட்சி 2 மற்றும் சாட்சி 3 யை பார்த்து உங்களுக்கு இங்க என்னடா வேலை குச்சிகாரி மகன்களா எனக் காமகுரோதமாக திட்டிய குற்றம். |
| இரண்டாவதாக | U/s. 133-ன்படி, BNS 3வது எதிரி செருப்பால் அடித்தும் புகார்தாரர் மற்றும் சாட்சி 2 மற்றும் 3 அவதிப்பு செய்த குற்றம். |
| மூன்றாவதாக | U/s. 351(3)-ன் BNS 2வது எதிரி கம்பியை காட்டி |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:03:55 +0530

| | | |
|---|---|---|
| | | உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டிய குற்றம் |
| நான்கவதாக | | U/s. 131–ன் படி 2 வது எதிரி கம்பியால் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்திய குற்றம். |
| எதிரிகளின் பதில்கள் | | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | | எதிரிகளின் மீதான 296(b), 131, 351(3), 133 இதச–ன் கீழான குற்றசாட்டு நிரூபனம் செய்யப்படவில்லை |
| தண்டனை அல்லது உத்தரவு | | இறுதியாக, 1 முதல் 3 எதிரிகள் பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 296(b) ன் கீழும், 2 வது எதிரியின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 351(3)ன் கீழும் 3 வது எதிரியின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 133 ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(1)ன்கீழ் விடுதலை செய்தும், 2 வது எதிரியின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 131 ன் கீழ் தண்டனை தீர்ப்பு வழங்கி பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>ii)2 வது எதிரியின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 131ன் கீழான குற்றத்திற்கு குறைந்தபட்ச அபராதம் மட்டுமே போதும் என்று இந்நீதிமன்றம் கருதி, 2 வது எதிரியின் மீதான BNS பிரிவு 131ன் கீழான குற்றத்திற்கு ரூ.1,000/– அபராதமும் |

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:04:02 +0530

| | | |
|---|---|---|
| | | விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைத்தண்டனையும், பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(2)ன் தண்டனை வழங்கி தீர்ப்பு அளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கானது இன்று 18.04.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை–1 திரு.இளஞ்செழியன், அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ராம்.சுந்தர், பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்ததுமான இவ்வழக்கில் இன்று 27.04.2026 இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

1. **<u>அரசுத்தரப்பு வழக்கு:</u>**

அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றயிறுதி அறிக்கையில் இருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு, இவ்வழக்கின் புகார்தாரர் குடும்பத்திற்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் இடையே வாய்தகராறில் ஏற்கனவே முன் விரோதம் இருந்து வந்துள்ளதாகவும், இந்நிலையில், கடந்த 05.01.2025 ஆம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் புகார்தாரர் தனது மகன்களான சாட்சி 2 மற்றும் சாட்சி 3

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:04:09 +0530

உடன் கோமதி வீட்டு முன்பு நடந்துசென்ற போது எதிரி 1 முதல் 3 எதிரிகள் உங்களுக்கு இங்கு என்னடா வேலை குச்சிக்காரி மகன்களா என காமகுரோதமாக திட்டியும், 2 மற்றும் 3 வது எதிரி அப்படிதாண்டா திட்டுவோம் எனச்சொல்லி திட்டியும், 2 வது எதிரி கம்பியால் அடித்து சொற்பகாயத்தையும், 3 வது எதிரி செருப்பாலும் அடித்தும் 2 வது எதிரி ராஜா போகும் போது கம்பியை காட்டி உங்களை கொல்லாமல் விடமாட்டேன்னு மிரட்டி சென்றுள்ள 1 வது எதிரியின் செய்கையானது 296(b) BNS ன் கீழும் 2 வது எதிரியின் செய்கையானது 296(b), 131, 351(3) BNS ன் கீழும், 3 வது எதிரியின் செய்கையானது 296(b), 133, BNS ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

**2. <u>வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட விவரம்:</u>**

BNSS பிரிவு 193(2) பிரிவின் கீழான குற்றயிறுதி அறிக்கையானது வலங்கைமான் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் கடந்த 07.01.2025–ம் தேதியன்று 296(b), BNS ன் கீழ் 1 முதல் 3 எதிரிகளின் மீதும், 131, மற்றும் 351(3) BNS ன் கீழும் 2 வது எதிரியின் மீதும் 133 BNS–ன் கீழ் 3 வது எதிரியின் மீதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது மேற்படி குற்றயிறுதி அறிக்கையானது கடந்த 29.05.2025 தேதி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு BNSS 227–ன் கீழ் 1 முதல் 3 எதிரிகளுக்கு சம்மன் அனுப்பப்பட்டது.

**3. <u>1 மற்றும் 3 எதிரிளுக்கு பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 230 ன் கீழ்</u>**

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:04:16 +0530

**<u>நகல் வழங்கப்பட்ட விவரம்</u>**

1 மற்றும் 3 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு BNSS 230-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**4. <u>எதிரியின் மீது வனைப்பட்ட குற்றச்சாட்டுகளின் விவரம்:</u>**

**4. 1.** எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டு, இருதரப்பு வாதங்களையும் கேட்டு, 1 வது எதிரியின் மீது 296(b) BNS ன் கீழும் 2 வது எதிரியின் மீது 296(b), 131, 351(3) BNS ன் கீழும், 3 வது எதிரியின் மீது 296(b), 133, BNS ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது.

**4.2.** மேற்படி குற்றச்சாட்டுகளை எதிரிகளிடம் விளக்கி வினவியபோது எதிரிகள் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தனர். எனவே அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**5. <u>அரசுத்தரப்பு சாட்சியம்:</u>**

அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6. <u>அரசுத்தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**6. 1. அசா.1 சரஸ்வதி** தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:04:22 +0530

என்றும், ஆஜர் எதிரிகள் தங்கள் தெருவில் வசித்து வருகிறார்கள் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் தனது கொழுந்தனார் முருகானந்தம் என்பவருக்கும் இடையே ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது என்று இந்நிலையில் கடந்த 05.01.2025 ம் தேதி இரவு 8.00 மணியளவில் தனது கொழுந்தனார் ரமேஷ் என்பவர் வீட்டிற்க்கு சாமி கும்பிட சென்றதாகவும், ரமேஷ் வீட்டிற்கு எதிரிகளின் வீட்டை கடந்து தான் செல்ல வேண்டும் எனவும், அவ்வாறு தான் ரமேஷ் வீட்டிற்கு சாமி கும்பிட சென்று விட்டு மீண்டும் தனது வீட்டிற்கு செல்வதற்காக ஆஜர் எதிரிகளின் வீட்டை கடந்து செல்லும் போது ஆஜர் எதிரி கோமதி தன்னை குச்சிகாரி தேவிடியா மகளே என்று கொச்சை வார்த்தைகளால் திட்டினார் என்றும், தான் ஆஜர் எதிரி கோமதியிடம் கேட்டதற்கு மீண்டும் தன்னை திட்டினார் என்றும், ஆஜர் எதிரி ராஜாவும் தன்னை குச்சிகாரி தேவிடியா மகளே என்று கொச்சை வார்த்தைகளால் திட்டினார் என்றும், ஆஜர் எதிரி ராஜா சண்டைகாரர்களை தான் திட்டுகிறேன் உங்களை திட்டவில்லை என்று சொன்னதாகவும், அதற்கு தான் தனது கொழுந்தனார் முருகானந்தம் இங்கு இல்லை தன்னை தான் திட்டுகிறேன் என்று சொன்னதாகவும், அப்போது தனது கொழுந்தனார் ரமேஷ் வீட்டில் இருந்து தனக்கு பின்னால் வந்து கொண்டிருந்த தனது மகன்கள் முகிலன் மற்றும் அமுதன் இருவரும் தன்னை வீட்டிற்கு போமா என்று சொன்னார்கள் என்றும், அப்போதும் ஆஜர் எதிரி ராஜா தனது மகன்களை குச்சிகாரி தேவிடியா மகனே என்று கொச்சை வார்த்தைகளால் திட்டினார் என்றும், தான் சண்டைகாரர்களை தான் பேசுகிறேன் உனது அம்மாவிற்கு

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:04:29 +0530

என்ன வந்தது என்று சொல்லி உனது அம்மா முருகானந்ததிற்கா உங்களை பெற்றார்கள் என்று சொல்லி உங்களுக்கு ஏன் ரோசம் வருகிறது என்று சொன்னார் என்றும், தனது மகன்கள் வாமா வீட்டிற்கு செல்லலாம் என்று அழைத்த போது ஆஜர் எதிரி ராஜா அவரது வீட்டில் இருந்து கம்பியை எடுத்து வந்து எனது மகன் அமுதனை கம்பியால் அடித்தார் என்றும், ஆஜர் எதிரி கோமதி தரக்குறைவாக தங்களை பேசினார் என்றும், ஆஜர் எதிரி அனுசியா தனது மகன் முகிலனை செருப்பால் அடித்தார் என்றும், ஊர்க்காரர்கள் தங்களை சமாதனப்படுத்தி அனுப்பி வைத்தார்கள் என்றும், தான் நடந்த சம்பவம் குறித்து வலங்கைமான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6.2. அ.சா.2 முகிலன்** தனது சாட்சியத்தில், தான் மேற்படி முகவரியில் வசித்து கும்பகோணத்தில் உள்ள சுப்ரீம் ஹார்டுவேர்ஸ் என்ற கடையில் லோடுமேனாக வேலை பார்த்து வருவதாகவும், அ.சா.1 தனது அம்மா ஆவார் என்றும், பட்டியல் சாட்சி 3 தனது தம்பி ஆவார் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் தங்கள் தெருவை சேர்ந்தவர்கள் என்றும், கடந்த 05.01.2025 இரவு 08.00 மணியவில் அ.சா.1 தனது அம்மா தனது சித்தப்பா ரமேஷ் என்பவரது வீட்டில் சாமி கும்பிடுவதற்காக சென்றதாகவும், தனது சித்தப்பா ரமேஷ் வீட்டிற்கு ஆஜர் எதிரிகளின் வீட்டை கடந்து தான்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:04:48 +0530

செல்ல வேண்டும் என்றும், தனது அம்மா சாமி கும்பிட்டுவிட்டு தனது சித்தப்பா வீட்டில் இருந்து தங்கள் வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரி கோமதி அவரது வீட்டின் திண்ணையில் அமர்ந்து கொண்டு தனது அம்மாவை பார்த்து, நாயால் ஏற்பட்ட பிரச்சனையில் ஏற்கனவே ஒருவனை எனது பெரியப்பா முருகனந்தத்தை ஜெயிலுக்கு அனுப்பி வைத்ததாகவும், அதே போல உன்னையும் பிரச்சனை செய்து அனுப்பி வைக்க வேண்டும் என்று சொன்னதகாவும், தனது அம்மாவை பற்றி ஆஜர் எதிரி கோமதி தவறாகவும் தகாத வார்த்தைகளாலும் பேசினார் என்றும், (சாட்சி ஆஜர் எதிரி கோமதி தனது அம்மாவை பற்றி பேசிய வார்த்தைகள் தன்னால் இந்நீதிமன்றத்தின் முன்பு கூறமுடியவில்லை என்று கூறுகிறார்) அப்போது ஆஜர் எதிரிகள் ராஜா மற்றும் அனுசியா இருவரும் தனது அக்காவிடம் என்ன பிரச்சனை செய்கிறாய் என்று கூறி தனது அம்மாவை தகாத வார்த்தைகாளல் திட்டியதாகவும், வீட்டில் இருந்த தானும் தனது பெரியப்பா மகன் கபிலன் மற்றும் தனது தம்பி அமுதன் மூவரும் வந்து பார்த்த போது ஆஜர் எதிரி ராஜா வாங்கடா உங்களுக்காக தான் காத்துக்கிட்டு இருக்கேன் என்று சொல்லி கையில் வைத்திருந்த கம்பியால் தங்களை அடிக்க வந்தார் அதனை தடுத்த தனது தம்பி அமுதனை இடது தோள்பட்டையில் ராஜா கம்பியால் அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றும், ஆஜர் எதிரிகள் கோமதியும் அனுசியாவும் தனது அம்மாவை செருப்பால் அடித்தார்கள் என்றும், சண்டையை தெருக்காரர்கள் விலக்கிய போது ஆஜர் எதிரி ராஜா இன்றைக்கு தப்பித்து விட்டீர்கள் என்றைக்காவது ஒரு நாள்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:04:55 +0530

மூவரும் மாட்டிக்கொள்வீர்கள் அன்று பார்த்துக் கொள்கிறேன் என்று மிரட்டினார் என்றும், தனது அம்மா காயம்பட்ட தனது தம்பி அமுதனை ஆவூர் அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்று அங்கு அவனுக்கு சிகிச்சை எடுத்து கொண்டு அதன் பிறகு வலங்கைமான் காவல் நிலையத்தில் நடந்த சம்பவம் குறித்து புகார் கொடுத்தார் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும், கடந்த 01.11.2025 ம் தேதி இந்நீதிமன்றத்தில் வழக்கிற்காக ஆஜர் ஆகிவிட்டு வீட்டிற்க்கு செல்லும் போது ஆஜர் எதிரி ராஜா தங்களை கோர்ட்டுக்கு இழுத்துவிட்டாய் உங்களை திரும்பி ஏதாவது செய்வேண்டா என்று எங்களை மிரட்டினார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6.3. அ.சா.3** கோபால் தனது சாட்சியத்தில் தான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருவதாகவும், அ.சா.1 , அ.சா.2 மற்றும் பட்டியல் சாட்சி 3 எனது உறவினர்கள் ஆவார்கள் என்றும், ஆஜர் எதிரிகள் தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் தனது ஊர்க்காரர்கள் எனவும், ஆஜர் எதிரி கோமதியின் வீடு தான் தனது தெருவில் நுழைந்ததும் முதல் வீடு ஆகும் என்றும், ஆஜர் எதிரி ராஜா 1ம் எதிரி கோமதியின் வீட்டிற்க்கு எதிர்புறம் வீட்டில் குடியிருந்து வருவதாகவும், ரமேஷ் என்பவரது வீடு ஆஜர் 1 வது எதிரியின் வீட்டிற்க்கு கீழ்புறம் உள்ளது என்றும், இன்றிலிருந்து தோராயமாக இரண்டு மாதங்களுக்கு முன்பு ரமேஷ் வீட்டில் இரவு 08.00 மணிக்கு மேல் சாமி கும்பிட்டார்கள் தான் அதற்கு சென்றிருந்ததாகவும்,. அப்போது அ.சா.2 ம் கபிலனும் அவர்களுக்குள் பேசிக்கொண்டு வந்தபோது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:05:12 +0530

ஆஜர் எதிரி கோமதியின் சித்தப்பா மகன் நீலகண்டன் என்பவர் அ.சா.2 யும் கபிலனையும் அழைத்து தமாசாக பேசிக்கொண்டு இருந்தார் என்றும், அப்போது முருகானந்தத்திற்க்கும் எதிரிகளுக்கும் நாய் கடித்ததாக இருந்த பிரச்சனை மற்றும் அவர்களுக்குள் இருந்த முன்விரோதத்தினை மனதில் வைத்துக் கொண்டு ஆஜர் 1 வது எதிரியின் அம்மா சந்திரா என்பவர் அ.சா.2, கபிலனை பார்த்து தனது கொழுந்தனார் வீட்டில் இவங்களுக்கு என்ன வேலை என்று திட்டியதாகவும், ஆஜர் 1 வது எதிரியும் தனது இடத்தில் என்ன வேலை என்று அ.சா.2, கபிலனை கொச்சை வார்த்தைகளால் பேசினார். அப்போது ஆஜர் எதிரி ராஜா ஏற்கனவே முருகானந்தத்தை உள்ளே அனுப்பி விட்டோம் இவர்களையும் விடக்கூடாது என்று சொல்லி அ.சா2 , கபிலனை நோக்கி கம்பியை எடுத்து கொண்டு அடிப்பதற்காக வந்தார் என்றும், அப்போது அதை தடுக்க வந்த அமுதனை ஆஜர் எதிரி ராஜா கையில் அடித்து விட்டார் என்றும், ஆஜர் எதிரிகள் கோமதி மற்றும் அனுசியா இருவரும் செருப்பாலும், விளக்குமாறாலும் அ.சா.2 ஐ அடித்தார்கள் என்றும், தான் நடந்த சம்பவத்தை பேசி கொள்ளலாம் என்று சமாதானம் செய்து அ.சா.2, கபிலன், அமுதன் ஆகியோர்களை அனுப்பி வைத்தேன் என்றும், இந்நடந்த சம்பவம் குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6.4. அ.சா.4 அமுதன்** தனது சாட்சியத்தில் தான் மேற்படி முகவரியில் நிறந்தரமாக வசித்து தற்போது திருப்பூரில் தனியார் நிறுவனத்தில் வேளை பார்த்து வருவதாகவும், அ.சா.1 தனது அம்மா ஆவார் என்றும், அ.சா.2 தனது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:05:19 +0530

அண்ணன் ஆவார் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தனது பெரியப்பா முருகானந்தம் என்பவருக்கும் ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்க்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது என்றும், இந்நிலையில் கடந்த 05.01.2025 ம் தேதி இரவு 08.00 மணியளவில் தனது அம்மா தனது சித்தப்பா ரமேஷ் என்பவர் வீட்டிற்க்கு போகும் போது ஆஜர் 1 வது எதிரி தனது அம்மாவை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்றும், (சாட்சி ஆஜர் 1 வது எதிரி தனது அம்மாவை திட்டிய வார்த்தைகள் குறித்து நீதிமன்றத்தில் கூறுவதற்க்கு சங்கடப்படுகிறார்). என்றும், அப்போது ஆஜர் 2, 3 எதிரிகளும் கொச்சை வார்த்தைகளால் தனது அம்மாவை திட்டியதாகவும், ஆஜர் 2 வது எதிரி கம்பியால் தனது அம்மாவை அடிக்க வந்ததாகவும், அதை அ.சா.2 தனது பெரியப்பா மகன் கபிலன் என்பவரும் தடுக்க போனார்கள் என்றும், தானும் அதை தடுக்க போனேன் அப்போது 2 வது எதிரி கையில் வைத்திருந்த கம்பியால் தனது வலது கையில் அடித்து தனக்கு காயம் ஏற்பட்டது என்றும், ஆஜர் 2 வது எதிரி இப்போது தப்பித்து விட்டீர்கள் மீண்டும் மாட்டும் போது சாவடித்து விடுவேன் என்று எங்களை மிரட்டினார் என்றும், தான் தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக தனது அம்மா மற்றும் அண்ணனுடன் ஆவூர் அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், அதன் பிறகு வலங்கைமான் காவல் நிலையம் வந்து நடந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், தன்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6.5. அ.சா.5 ரமேஷ்** தனது சாட்சியத்தில் தான் மேற்படி முகவரியில் வசித்து

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:05:26 +0530

விவசாயம் செய்து வருவதாகவும், அ.சா.1 தனது அண்ணி ஆவார் என்றும், அ.சா.2,4 தனது அண்ணன் மகன்கள் ஆவார் என்றும், அ.சா.3 தனது சித்தப்பா ஆவார் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தனது பக்கத்து வீட்டுக்காரர் என்றும், இன்றிலிருந்து ஒரு வருடத்திற்க்கு முன்பு ஒரு நாள் தங்கள் வீட்டின் சாமி கும்பிட்டோம் அதற்கு அ.சா.1 2,4 மற்றும் தனது பங்காளிகள் வந்திருந்தார்கள் என்றும், அப்போது ஆஜர் 1 வது எதிரி அவரது வீட்டில் பேசிக்கொண்டிருந்தார் அப்போது அ.சா.1 ஆஜர் 1 வது எதிரியிடம் யாரை பேசுகிறாய் என்று கேட்டதாகவும், அப்போது இருவருக்கும் சண்டை நடந்தது என்றும், அதை தான் பார்த்ததாகவும், அதன்பிறகு ஆஜர் 2 வது எதிரி கம்பியை தூக்கி கொண்டு ஓடியதில் அ.சா.4 க்கு காயம் ஏற்பட்டது என்றும், இது குறித்து தன்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6.6. அ.சா.6 முருகையன்** தனது சாட்சியத்தில் தான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருவதாகவும், அ.சா.1, 2, 4 மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அ.சா.1, 2, 4 மற்றும் ஆஜர் எதிரிகளுக்கிடையே என்ன பிரச்சனை என்று தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் தான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6.7. அ.சா.**7 **முருகானந்தம்** தனது சாட்சியத்தில் நான் மேற்படி முகவரியில்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:05:33 +0530

வசித்து விவசாயக் கூலியாக வேலை செய்து வருவதாகவும், அ.சா.1, 2, 4 ,மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், ஆஜர் எதிரிகளின் வீடுகள் தங்கள் தெருவின் ஆரம்பத்திலும் ரமேஷ் என்பவரது வீடு எங்கள் தெருவின் கடைசியிலும் உள்ளது என்றும், கடந்த 05.01.2025 ம் தேதி தான், அ.சா.1, 3 மூவரும் ரமேஷ் என்பவரது வீட்டிற்கு சாமி கும்பிடுவதற்காக சென்றோம் அப்போது அ.சா.2 மற்றும் கபிலன் என்பவரும் ஆற்றிலிருந்து தனது வீட்டிற்க்கு வந்து கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது நீலகண்டன் என்பவர் அ.சா.2 மற்றும் கபிலன் இருவரையும் வாங்க மாப்பிள்ளை என்று அவரது வீட்டிற்கு கூப்பிட்டதாகவும், அப்போது நீலகண்டன் வீட்டிற்கு சென்று கொண்டிருந்த அ.சா.2 மற்றும் கபிலனை ஆஜர் 1 வது எதிரியின் அம்மா சந்திரா என்பவர் நீங்கள் சண்டைக்காரர்கள் தானே தனது கொழுந்தனார் வீட்டில் உங்களுக்கு என்ன வேலை என்று அசிங்கமாக திட்டினார் என்றும், அப்போது அ.சா.2 , கபிலன் நீலகண்டன் கூப்பிட்டார் என்றும், அதனால் பேசிக்கொண்டு இருக்கிறோம் என சந்திராவிடம் சொன்னார்கள் என்றும், சந்திரா அ.சா.2, கபிலனை பேசவும் அவர்கள் அங்கிருந்து அவர்கள் இருவரும் தங்கள் வீட்டிற்கு சென்று விட்டார்கள். அதன் பிறகு ரமேஷ் வீட்டிற்க்கு சென்று கொண்டிருந்த போது ஆஜர் 1 வது எதிரி கெட்டவார்த்தைகளால் பேசிக்கொண்டு இருந்தார் என்றும், அ.சா.1 ஆஜர் 1 வது எதிரியிடம் தங்கள் பையன்கள் வந்தது தவறுதான் அவர்கள் தான் போய்விட்டார்களே ஏன் பேசுகிறீர்கள் என்று கேட்டதாகவும், உன்னை தான் தேடிக்கொண்டு இருக்கிறோம் என்று சொல்லி ஆஜர் 2 வது எதிரி

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:05:40 +0530

கம்பியால் அ.சா.1 ஐ அடிக்க முற்படும் போது அ.சா.2,4 மற்றும் கபிலன் அதை தடுத்தார்கள் என்றும், அதில் அ.சா.4 க்க காயம் ஏற்பட்டது. அதன் பிறகு அ.சா.4 ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் மேற்படி கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும், (பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அரசு தரப்பு சான்றாவணம்–2** கூறியீடு செய்யப்படுகிறது.). போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6.8. அ.சா**.8 **சுப்பிரமணியன்** (புலன் விசாரணை அதிகாரி) தான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 06.01.2025 ஆம் தேதி வலங்கைமான் காவல் நிலைய அலுவலில் இருந்த போது வலங்கைமான் அவிச்சாகுடி கீழத்தெருவைச் சேர்ந்த வெங்கடேசன் மனைவி சரஸ்வதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகரை பெற்று நிலைய குற்ற எண்.10/2025 சட்டபிரிவுகள் 296(b). 118(1), 133, 351(3) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.** 3 ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும், கடந்த 07.01.2025 ஆம் தேதி 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று முருகையன், முருகானந்தம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன் என்றும், மேற்படி (பார்வை மகசர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ.** 4, 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது) பின்னர் சாட்சிகள் சரஸ்வதி, ரமேஷ், கோபால்,

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:05:47 +0530

முருகையன், முருகானந்தம் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரிகளை தேடி வந்த நிலையில் **07.01.2025** ஆம் தேதி **14.30** மணிக்கு சந்திரசேகரபுரம் ஆர்ச் அருகில் நின்று கொண்டிருந்த ஆஜர் **2** வது எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து உரிய சட்ட நடைமுறைகளுக்கு பின்பு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், இவ்வழக்கின் மற்ற எதிரிகள் இருவரும் மாண்பமை திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணையில் சென்ற விபரத்தினை தெரிந்து கொண்டேன் என்றும், இவ்வழக்கின் சாட்சிகள் முகிலன் மற்றும் அமுதன் இருவரையும் **10.02.2025** ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகளின் விசாரணையில் இருந்து காயம்பட்ட நபர்கள் வலங்கைமான் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றும் அவர்களுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என அவர்கள் மேல் சிகிச்சை எதுவும் பெறவில்லை என தெரிய வந்ததால் வழக்கின் சட்டபிரிவுகள் **296(b). 118(1), 133, 351(3) BNS** ன் என்பதை சட்டப்பிரிவுகள் **296(b). 133, 351(3), 131 BNS** ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், (சட்டபிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது) என்றும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் **296(b). 133, 351(3), 131 BNS** ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:05:54 +0530

**7. பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 351(1) (b) ன் படியான விசாரணை:**

இவ்வழக்கில் அரசுத்தரப்பால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து BNSS பிரிவு 351 (1) (பி) ன் கீழ் எதிரிகளிடம் வினவிய போது எதிரிகளிடம் மேற்படி சாட்சிகளின் சாட்சியம் பொய் என்று மறுத்துரைத்தனர். மேலும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எதுவும் உண்டு என தெரிவித்து, பின்னிட்டு எதிரிகள் தரப்பில் சாட்சியம் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**8. எதிரி தரப்பு வழக்கு:**

எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றும் எதிரிகள் தான் குற்றத்தை செய்தார்கள் என்று நிருப்பிக்க சாட்சியம் எதுவும் இல்லை என்பது எதிரிகள் தரப்பு வாதமாகும். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை ஆவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**9. தீர்வுக்குறிய பிரச்சினை:**

i) எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டினை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பித்துள்ளதா?

ii) மேலும் அவ்வாறு குற்றம் நிருப்பிக்கப்பட்டிருப்பின் எதிரிகளுக்கு கிடைக்கக்கூடிய தண்டனையின் விபரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வு குரிய பிரச்சினையாகும்.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:06:02 +0530

**10. <u>தீர்வு :</u>**

**10.1.** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.8** வரையிலான சாட்சிகளின் சாட்சியம் மற்றும் **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்களின் மூலம் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிருப்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஆகையால் எதிரிகளை குற்றவாளி என தீர்மானித்து தக்க தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

**10.2.** எதிரிகள் தரப்பில் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பிக்கப்படவில்லை என்றும், எதிரிகளை குற்றச்சம்பவத்தோடு தொடர்புப்படுத்தும் விதத்தில் எவ்வித சாட்சியமும் இல்லை என்றும், எனவே, எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பு வழங்குமாறு வாதிடப்பட்டது.

**10.3.** பொதுவாக, குற்ற வழக்குகளில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சம்பவம் குறித்து நீதிமன்றம் நம்பத்தகுந்த வகையிலும், எவ்வித முரண்பாடுகள் இல்லாமலும், பொருண்மையை ஒரேவிதமாக குறிப்பிட்டு அமைய வேண்டும். அந்த வகையில் இவ்வழக்கின் சாட்சியங்கள் மேற்படி வகைமுறைகளுக்கு உட்பட்டு அமைந்திருக்கிறதா? என்பதே பரிசீலிக்கப்பட வேண்டும்.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:06:12 +0530

**10.4.** 1 முதல் 3 எதிரிகளின் மீதான பிரிவு 296(b) BNS–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது புகாரில், கடந்த 05.01.2025 ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் இவ்வழக்கின் புகார்தாரர் சரஸ்வதி என்பவர் தனது மகள்களுடன் 1 வது எதிரியின் வீட்டின் வழியாக சென்போது 1 வது எதிரி உங்களுக்கு இங்கு என்னடா வேலை குச்சிகாரி மகன்களா என காமகுரோதமாக திட்டியும், 2, 3 எதிரிகள் காமகுரோதமாக திட்டியதாக கூறியுள்ளார். பின்னிட்டு, அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், கடந்த 05.01.2025 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் தனது கொழுந்தனார் ரமேஷ் வீட்டிற்கு சாமி கும்பிட சென்றுவிட்டு தனது வீட்டிற்கு ஆஜர் எதிரிகளின் வீட்டை கடந்து செல்லும்போது 1 வது எதிரி தன்னை குச்சிகாரி, தேவிடியா மகளே என்று கொச்சை வார்த்தைகளால் திட்டினார் என்றும், 2 வது எதிரி ராஜா தன்னை குச்சிகாரி தேவிடிய மகளே என்று கொச்சை வார்த்தைகளால் திட்டினார் என்றும் தனது மகன்களை குச்சிகாரி தேவிடியா மகனே என்று கொச்சை வார்த்தைகளால் திட்டினார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**10.5.** காயம்பட்ட சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 05.01.2025 ஆம் தேதியன்று இரவு 08.00 மணியளவில் தனது அம்மா தனது சித்தப்பா ரமேஷ் என்பவரது வீட்டிற்கு சாமி கும்பிடுவதற்காக சென்றதாகவும், தனது அம்மா சாமி கும்பிட்டுவிட்டு எதிரிகள் வீட்டின் வழியாக வந்தபோது 1 வது எதிரி தனது அம்மாவை பார்த்து நாயால் ஏற்பட்ட பிரச்சனையில்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:06:20 +0530

ஏற்கனவே ஒருவனை ஜெயிலுக்கு அனுப்பி வைத்தோம் அதே போல் உன்னையும் பிரச்சனை செய்து அனுப்பி வைக்க வேண்டும் என்று சொன்னதாகவும், அப்போது எதிரிகள் மூவரும் தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்.

**10.6.** மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், இன்றிலிருந்து சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு ரமேஷ் வீட்டில் இரவு 08.00 மணிக்கு சாமி கும்பிட்டதாகவும், தான் அதற்கு சென்றுவிட்டு, 1வது எதிரியின் சித்தப்பா மகன் நீலகண்டன் என்பவர் அ.சா.2 யையும், கபிலனையும் அழைத்து தமாசாக பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு, 1வது எதிரியின் அம்மா அ.சா.2 கபிலனை திட்டியதாகவும், 1வது எதிரி தனது இடத்தில் என்ன வேலை என்று கொச்சை வார்த்தைகளால் திட்டினார் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 05.01.2025 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் தனது அம்மா சித்தப்பா ரமேஷ் என்பவர் வீட்டிற்கு போகும்போது 1வது எதிரி தனது அம்மாவை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்றும், 2, 3 எதிரிகளும் தனது அம்மாவை திட்டினார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**10.7.** கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், இன்றிலிருந்து ஒரு வருடத்திற்கு முன்பு ஒருநாள் தங்கள் வீட்டில் சாமி

கும்பிட்டபோது அ.சா.1, 2, 4 மற்றும் தனது பங்காளிகள் வந்திருந்ததாகவும், அப்போது ஆஜர் 1வது எதிரி அவரது வீட்டில் பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது அ.சா.1 ஆஜர் 1வது எதிரியிடம் யாரை பேசுகிறாய் என்று கேட்டபோது இருவருக்கும் சண்டை நடந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**10.8.** மேலும் அ.சா.1 தனது புகாரிலும், நீதிமன்ற சாட்சியத்திலும் எதிரிகள் அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்று கூறியுள்ளார். மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்கையில், எதிரிகள் அ.சா.1 ஐ, தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்கள். இந்நீதிமன்றம் BNS பிரிவு 296(b)இல் குறிப்பிட்டுள்ள விளக்கத்தையும், மாண்புமிகு உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்றத்தின் பல வழக்குகளில் வழங்கியுள்ள வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தல்களின்படியும், மேற்படி இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.5 வரை உள்ள சாட்சிகளின் சாட்சியத்தை கருத்தில் கொள்ளும்போதும், அரசு தரப்பு வாதத்தில் கூறுவதுபோல், ஆபாச வார்த்தைகைளை உச்சரித்தால் மட்டுமே BNS பிரிவு 296(b)ன் வரையறைகளை ஈர்த்ததாக பொருள்கொள்ள முடியாது. மாறாக BNS பிரிவு 296(b) ஐ ஈர்க்க மேற்படி ஆபாச வார்த்தைகளை பொது இடத்திலோ அல்லது அதன் சுற்றுபுறத்திலோ எதிகளால் பேசப்பட்டு, அதனால் புகார்தாரருக்கோ அல்லது பிறருக்கோ அருவருப்போ அல்லது தொல்லையோ ஏற்பட்டது என்பதற்கு இவ்வழக்கின் சாட்சிகள் எதுவும் இல்லாத நிலையில், BNS பிரிவு 296(b)–ன் கீழான குற்றச்சாட்டு 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிராக நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:06:39 +0530

நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**11)** 2 வது எதிரியின் மீதான BNS பிரிவு 351(3) ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது புகாரில் 2 வது எதிரி கம்பியை காட்டி உங்களை கொல்லாமல் விடமாட்டேன்னு என்று மிரட்டி சென்றதாக கூறியுள்ளார். பின்னிட்டு அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 2 வது எதிரி கொலை மிரட்டல் விடுத்தார் என்று குறிப்பிட்டு எவ்வித சாட்சியம் அளிக்கவில்லை. காயம்பட்ட சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 2 வது எதிரி இன்றைக்கு தப்பித்து விட்டீர்கள் என்றைக்காவது ஒரு நாள் மூவரும் மாட்டிக்கொள்வீர்கள் அன்று பார்த்துக்கொள்கிறேன் என்று மிரட்டியதாக சாட்சியமளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 2 வது எதிரி ஏற்கனவே முருகானந்தத்தை உள்ளே அனுப்பிவிட்டோம் இவர்களையும் விடக்கூடாது என்று சொல்லி அ.சா.2 கபிலனை நோக்கி கம்பியை எடுத்துக்கொண்டு அடிப்பதற்காக வந்தார் என்று சாட்சியமளித்துள்ளார். காயம்பட்ட சாட்சியான அ.சா.4 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 2 வது எதிரி கம்பியால் தனது அம்மாவை அடிக்க வந்ததாகவும், அதை அ.சா.2 தனது பெரியப்பா மகன் கபிலன் என்பவரும் தடுக்க போனர்கள் என்றும், தானும் அதை தடுக்க போனேன் என்றும், அப்போது 2 வது எதிரி கையில் வைத்திருந்த கம்பியால் தனது வலது கையில் அடித்து தனக்கு காயம் ஏற்பட்டதாகவும், ஆஜர் 2 வது எதிரி இப்போது தப்பித்து

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:06:48 +0530

விட்டீர்கள் மீண்டும் மாட்டும்போது சாவடித்து விடுவேன் என்று தங்களை மிரட்டினார் என்றும் சாட்சியமளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 , 2 வது எதிரி அ.சா.1 ஐ மிரட்டியதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

**11.1.** மேலும் இந்நீதிமன்றம் BNS பிரிவு 351(3) ன் வரையறை கவனமாக பார்க்கும்போது, மேற்படி அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சியத்தை நன்கு பரிசீலனை செய்கையிலும், அ.சா.1 நீதிமன்ற சாட்சியத்தில் கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 தனது புகாரில் கொலை மிரட்டல் விடுத்ததாகவும், மேலும் அ.சா.2 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற முதல் விசாரணையில் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டுள்ளபோதும், அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலானவர்களை 1, 2 எதிரிகள் குற்றமுறு அச்சுறுத்தல் செய்தற்கான எந்தவொரு உட்கூறுகளையும், தங்களது சாட்சியத்தில் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1 க்கு 1 முதல் 3 எதிரிகளின் செய்கையால் உயிர்போகும் என்ற அச்சமோ, அல்லது பீதியோ ஏற்பட்டதாக சாட்சியம் அளிக்காத நிலையில் இந்நீதிமன்றம் 1, 2 எதிரிகளின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 351(3)ன் கீழான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12.** 3 வது எதிரியின் மீதான BNS பிரிவு 133 ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது புகாரில் அனுசியா தனது மகன்களை செருப்பால்

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:06:55 +0530

அடித்ததாக கூறியுள்ளார். மேலும் அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், ஆஜர் எதிரி அனுசியா தனது மகன் முகிலனை செருப்பால் அடித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 முகிலன் தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 1, 3 எதிரிகள் தனது அம்மாவை செருப்பால் அடித்தார்கள் என்று அ.சா.1ன் சாட்சியத்திற்கு முரன்பட்டு சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 தனது நீதிமன்ற சாட்சியத்தில் கோமதி மற்றும் அனுசியா இருவரும் அ.சா.2 ஐ செருப்பாலும் விளக்குமாறாலும் அடித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 தங்களது நீதிமன்ற சாட்சியத்தில் 3 வது எதிரி அனுசியா முகிலனை செருப்பால் அடித்ததாக எவ்வித சாட்சியம் அளிக்கவில்லை. பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.6 முருகையன் மற்றும் அ.சா.7 முருகானந்தம் ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற முதல் விசாரணையில், அரசு தரப்பு ஒத்துரைத்து சாட்சியம் அளிக்காமல் மாறாக முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்கள்.

**12.1.** மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலானவர்கள் நீதிமன்ற சாட்யத்தில் ஒன்றுக்கொன்று முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்கள். மேற்படி சாட்சிகள் அ.சா.1ன் சாட்சியத்திற்கு ஒத்துரைத்து சாட்சியம் அளிக்காத நிலையில் இந்நீதிமன்றம் 3வது எதிரியின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 133ன் கீழான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:07:02 +0530

**12.2.** 2 வது எதிரியின் மீதான BNS பிரிவு 131 ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது புகாரில் 2 வது எதிரி, அமுதனை கம்பியால் அடித்ததாக கூறியுள்ளார். பின்னிட்டு, அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், தனது மகன்கள் மாமா வீட்டிற்கு செல்லலாம் என்று சொன்னபோது 2 வது எதிரி, அமுதனை கம்பியால் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 2 வது எதிரி தனது தம்பியை கம்பியால் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 2 வது எதிரி அமுதனை கம்பியால் அடித்து காயத்தை ஏற்படுத்தியதாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியத்தில் 2 வது எதிரி தன்னை கம்பியால் கையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.5 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 2 வது எதிரி கம்பியை எடுத்து கொண்டு ஓடியதில் அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டதாக சாட்சியமளித்துள்ளார். பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற முதல் விசாரணையில், அரசு தரப்பு வழக்கை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்காமல் மாறாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி அ.சா.1 முதல் 5 வரையிலான சாட்சிகள் 2 வது எதிரி அமுதனை கம்பியால் அடித்து காயப்படுத்தியதாக சாட்சியமளித்துள்ளார்கள்.

**13.** மேலும் மேற்படி அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சியத்தின் சாட்சிய

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:07:09 +0530

வலிமை குறித்து பரிசீலனை செய்கையில்,

**State of madhaya Pradesh /Vs/ Mansingh and Ors** (2003(10) SCC Page 414) என்ற மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழக்கில், பத்தி, 9–இல்

**"The evidence of injured witnesses has greater evidentiary value and unless compelling reasons exist, their statements are not be discarded lightly"** என்று கூறப்பட்டுள்ளது.

மேற்படி உச்சநீதிமன்ற முன் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளதன்படி, இவ்வழக்கின் அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சியத்தை முரண்படுத்தும் விதமாக வேறு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் இல்லை என்பதால் மேற்படி சாட்சிகளின் சாட்சியமானது நம்பதகுந்த மற்றும் வலிமையான சாட்சியமாக உள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**14.** மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து அ.த.சா.ஆ.1 புகார், அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை ஆகிய சான்றாவணங்களிலும் காணப்படுகிறது. எதிரிகள் தரப்பில் புகார்தாரரான அ.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்தபோதும், அரசு தரப்பு வழக்கை முரண்படுத்தும் விதமாகவோ அல்லது அ.சா.1ன் சாட்சிய நம்பகதன்மையை இழக்கும் விதமாகவோ குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. மேற்படி அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.த.சா.ஆ.1 புகார் மற்றும் அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை ஆகிய சான்றாவணங்கள் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து காணப்படுகிறது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:07:16 +0530

**15.** மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 134 இல் வழக்கு சம்பவத்தை ஒரு சாட்சியை மட்டுமே வைத்து நிரூபிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளதையும், கருத்தில் கொண்டு, இவ்வழக்கின் 2 வது எதிரி அ.சா.4 ஐ அடித்து, அ.சா.4 க்கு சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே இவ்வழக்கில் 2 வது எதிரிக்கு எதிரான குற்றமான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 131 ன் கீழ் அரசு தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**16.** எனவே 2 வது எதிரி கம்பியால் அமுதனை அடித்து காயப்படுத்தியதாக அ.சா.1 ன் சாட்சியம் மற்றும் அ.த.சா.ஆ.1 புகார், அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை ஆகிய சான்றாவணங்கள் மூலம் நிருபணம் செய்துள்ளதால், 2 வது எதிரியின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 131 ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**17.** இறுதியாக, 1 முதல் 3 எதிரிகள் பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 296(b) ன் கீழும், 2 வது எதிரியின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 351(3)ன் கீழும் 3 வது எதிரியின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 133 ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(1)ன்கீழ் விடுதலை செய்தும், 2 வது எதிரியின் மீதான பாரதிய நியாக்

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:07:23 +0530

சன்ஹிதா பிரிவு 131 ன் கீழ் தண்டனை தீர்ப்பு வழங்கி பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

2 வது எதிரிக்கு அளிக்கப்படவேண்டிய தண்டனை குறித்து பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(2)ன் கீழ் வினவிய போது, 2 வது எதிரி கீழ்கண்டவாறு பதில் அளித்தார்.

மன்னித்துவிடுங்கள் என்று கூறினார்

( 2 வது எதிரியின் பதில் தனித்தாளில் எழுதப்பட்டுள்ளது)

**18)** 2 வது எதிரி அளித்த பதிலினை கவனமாக பரிசீலனை செய்ததில், 2 வது எதிரி செய்த குற்றமானது சமூகத்திற்கு எதிரான குற்றமாகும். எனவே எதிரிக்கு நன்னடத்தை சட்டத்தின் கீழோ அல்லது BNSS பிரிவு 401 ன்படியோ பலன்கள் ஏதும் கிடைக்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**19)** இறுதியாக 2 வது எதிரியின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 131 ன் கீழான குற்றத்திற்கு குறைந்தபட்ச அபராதம் மட்டுமே போதும் என்று இந்நீதிமன்றம் கருதி, 2 வது எதிரியின் மீதான BNS பிரிவு 131 ன் கீழான குற்றத்திற்கு ரூ.1,000/− அபராதமும் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைத்தண்டனையும், பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(2)ன் தண்டனை வழங்கி தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

**20)** 2 வது எதிரி காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு இந்நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார். 2 வது எதிரிக்கு தண்டனை ஏதும் வழங்காமல்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:07:31 +0530

அபராதம் மட்டும் வழங்கியுள்ளதால் BNSS பிரிவு 468 ன் கீழ் உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

**21)** இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை என்பதால் அதுகுறித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

**22)** எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் இரத்து செய்யப்பட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப்பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி திங்கள்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:07:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

**இணைப்பு**

**சாட்சிகளின் விபரம் அரசுதரப்பு சாட்சிகள்**

| தரவரிசை | பெயர் | வகை |
|---|---|---|
| அ.சா.1 | சரஸ்வரதி | புகார்தாரர் |
| அ.சா.2 | முகிலன் | Victim Statement |
| அ.சா.3 | கோபால் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | அமுதன் | Victim Statement |

| | | |
|---|---|---|
| அ.சா.5 | ரமேஷ் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.6 | முருகையன் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.7 | முருகானந்தம் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.8 | சுப்பிரமணியன் | புலன் விசாரணை அதிகாரி |

**எதிரிகள் தரப்பு சாட்சி – இல்லை**
**நீதிமன்ற சாட்சி – இல்லை**

**சான்றாவணங்களின் விபரம்**

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| **வ.எண்** | **சான்றாவண எண்.** | **விபரம்** |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ. 1/அ.சா.1 | புகார் வாக்குமூலம் |
| 2. | அ.த.சா.ஆ.2/அ.சா.7 | பார்வை மகசரில் இரண்டாவது கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ. 3/அ.சா.8 | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ. 4/அ.சா.8 | பார்வை மகசர் |
| 5. | அ.சா.ஆ. 5/அ.சா.8 | வரைபடம் |
| 6. | அ.சா.ஆ.6/ அ.சா.8 | சட்டப்பிரிவு மாற்றம் செய்த அறிக்கை |

**எதிரிகள் தரப்பு சான்றாவணம் – இல்லை**
**நீதிமன்ற சான்றாவணம் – இல்லை**

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:07:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

**<u>தீர்ப்புரையின் நகல் :</u>**

1. மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

**<u>குறிப்பு</u>**

1. இவ்வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்ற விசாரணையின் போது பிணையில் இருந்தனர்.
3. சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:07:57 +0530